தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம் !

இன்று நாமக்கல், பெரம்பலூரில் உரையாற்றுகிறார் !

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஐந்தாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 13-ஆம் தேதி திருவள்ளூரில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று நாமக்கல், பெரம்பலூரில் உரையாற்றுகிறார்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள்
16.04.2026 (வியாழக்கிழமை)		
மாலை 5 மணி	நாமக்கல் - பொம்மு குட்டைமேடு (பொதுக்கூட்டம்)	நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு
மாலை 7 மணி	பெரம்பலூர் - ஒதியம் பிரிவு, குன்னம் (பொதுக்கூட்டம்)	பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம்

குறிப்பு: ❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

தலைமைக் கழகம்,
தி.மு.க.

தருமபுரி மாவட்டத்தில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.4.2026) காலை பாலக்கோடில் நடைபயிற்சி மேற்கொண்டபோது, கழக வேட்பாளர் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் அவர்களுக்கு வாக்கு சேகரித்தார். உடன், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பழனியப்பன் ஆகியோர் உள்ளனர்.